# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

## ஆண்டு 5

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# தமிழர் எம் தனித்துவக் கலைகள்

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி”

தீட்டிய குகை ஓவியன் முதல், கணனியில் காவியம் படைக்கும் இன்றைய கலைஞன் வரை கலை வளர்ப்பதே நம் தமிழரின் தலைசிறந்த பண்பு. கலை அது வெறும் பொழுது போக்கல்ல. அது நம் வாழ்வின் அங்கம். தமிழர் எம் பண்பாட்டின் அடையாளம்.

தஞ்சைப் பெரிய கோவிலின் வானுயர்ந்த கோபுரமும் மதுரை மீனாட்சியின் ஆயிரங்கால் மண்டபமும் வெறும் கற்களல்ல, அவை தமிழர் எம் கட்டடக்கலையையும் பொறியியல் நுட்பத்தையும் கூறும் கவிதைகள்.

கல்லில் கதை சொல்லும் சிற்பக்கலையும் வண்ணங்களில் வாழ்வை வரையும் ஓவியக்கலையும் எம்மவர்களின் தனிச்சிறப்பு. இவை தவிர இயல், இசை, நாடகம், வாத்தியக் கலைகள் என தமிழர் எம் கலைகள் எத்தனை? எத்தனை?

இந்தப் புவியில் நம் தமிழரின் கலை அடையாளங்கள் வண்ணம் தீட்டிய கைகளாலும் உளி பிடித்த கரங்களாலும் சலங்கை அணிந்த கால்களாலும் யாழ் மீட்டிய விரல்களாலும் என்றும் உயிர்ப்புடன் இருக்கும் என்பதுடன் தமிழும் தமிழர் பண்பாடும் அழியாது நீடித்து நிலைத்து நிற்கும் எனக்கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்.



திருமதி. பலோமியற் அன்ரனிஸ்ராலின்

பேச்சுப் போட்டி எதிர்வரும் 06.06.2026 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.